සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**

මුදල් අමාත්‍යාංශය
සමෘද්ධි , ගෘහ ආර්ථික, ක්ෂුද්‍ර මූල්‍ය, ස්වයං රැකියා, ව්‍යාපාර සංවර්ධන හා උඌණ උපයෝජන රාජ්‍ය සම්පත් සංවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு
Ministry of Finance
State Ministry of Samurdhi, Household Economy, Micro Finance, Self Employment, Business Development and Underutilized State Resources Development


| මගේ අංකය / எனது இல / My No | ඔබේ අංකය / உமது இல / Your No | දිනය / திகதி / Date |
|---|---|---|
| DSD/HO/SW/14/19/01- Circular | ........................................... | 2021.02.18 |

**சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் 2021/03**

சகல மாவட்ட செயலாளர்கள்/ மாவட்ட சமுர்த்தி மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதிகள், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரகள்/ பிரதேச செயலாளரகள், மாவட்ட சமுர்த்தி உதவிப் பணிப்பாளர்கள்/ மாவட்ட சமுர்த்தி பிரதிப் பணிப்பாளர்கள், சமுர்த்தி முகாமையார்கள்/ சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு,

**<u>சமுர்த்தி நிவாரணத்தின் பொருட்டு தகுதிகளைப் பெறும் குடும்பங்களை தெரிவு செய்தல்.</u>**

**01. அறிமுகம்:-**

சமுர்த்தி வேலைத்திட்டமானது இலங்கையில் வறுமையினைக் குறைத்து பின் தங்கியுள்ள சமூகப் பிரிவினரை வலுவூட்டும் அரசாங்கத்தின் முக்கியமான மூலோபாய அபிவிருத்தி வேலைத்திட்டம் ஒன்றாகும் என்பதனால், அங்கு இனங்காணப்பட்ட குறைபாடுகளை தீர்த்துக்கொண்டு மிகப் பொருத்தமான நபர்களையும், குடும்ப அலகுகளையும் வலுவூட்டுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பிரகாரம் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் விலகிச்செல்லும் சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கைக்குப் பதிலாக தகுதிகளையுடைய புதிய குடும்பங்களை சமுர்த்தி நிவாரண வேலைத்திட்டத்தில் உட்படுத்துவதற்கு தீர்மாணிக்கப்பட்டுள்ளது.

**02. சமுர்த்தி நிவாரணம், மற்றும் சமூக பாதுகாப்பு குடும்பங்களை வரைவிலக்கணப்படுத்துதல்.**

இக்குடும்பம் வரைவிலக்கணப்படுத்தப்படுவது “தாய், தந்தை உட்பட திருமாணமாகாத பிள்ளைகள் மற்றும் அக்குடும்பத்தில் தங்கி வாழும் வயது வந்தோர்கள் மற்றும் ஏனையவர்களும் ஒரே வீட்டிற்குள் வசிக்கின்றவர்கள்” என்பதாகும். ஒரே வீட்டில் தனி ஒரு குடும்பமாக செயற்படுவது தொடர்பான காரணிகள் இருப்பின் (தனித்தனியாக பிரதான வீட்டுக் குடியிருப்பாளருக்கான இலக்கங்கள் இருத்தல் போன்றவை) அக்குடும்பத்தினை பிறிதொரு குடும்பம் எனக் கருதமுடியும் மேலும் சமுர்த்தி நிவாரணத்தினை வழங்குவதற்கு அடிப்படையாகக் கொண்ட குடும்பப்பட்டியலில் குடும்பங்களின் விபரங்களைக் குறிப்பிட்டுள்ள விண்ணப்பப்படிவத்தில் உள்ளடங்கியுள்ள அங்கத்தவர்களின் தகவல்கள் சமனாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அந்த அங்கத்தவர்களின் பொருட்டு மாத்திரம் இந்த நன்மைகளை வழங்குதல் வேண்டும். ஏற்கனவே சமுர்த்தி நிவாரணம் உள்ள சகல குடும்பங்களும் எதிர்காலத்தில் அந்த நன்மைகளை கிடைக்கவுள்ள குடும்பங்களின் பொருட்டும் சமூக பாதுகாப்பு நன்மைகளை வழங்கும் போது இந்த வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

**03. சமுர்த்தி நிவாரணம் கிடைக்காமல் போகும் சந்தர்ப்பங்கள்.**

சமுர்த்தி நிவாரணம் கிடைக்கப் பெறுவதற்கு தகுதிகள் இல்லாமல் இருப்பதற்கு கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் உதவுகின்றதுடன் அதன் பிரகாரம் புதிய விண்ணப்பதாரிகளும் தற்போது சமுர்த்தி நிவாரணத்தினைப் பெறுகின்ற குடும்பங்களும் அந்த விடயங்களுக்குறியதாகுமிடத்து அவர்களுக்கு நிவாரணங்கள் கிடைக்கப் பெறமாட்டாது.


**1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla**

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන) / பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்) / Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

I. அரச அல்லது தனியார் பிரிவில் நிரந்தரமான தொழிலை மேற்கொள்கின்ற அங்கத்தவர் ஒருவர் குடும்ப அலகில் உள்ளமை.
II. அரசாங்கத் தொழில் ஒன்றில் ஈடுபட்டதன் காரணத்தினால் ஒய்வூதியத்திற்கு உரித்துடையவர் குடும்ப அலகிலுள்ளமை.
III. வருமானமீட்டல் செயற்பாடு ஒன்றின் ஊடாக கூடிய வருமானத்தினை உழைக்கின்ற வலுவூட்டப்பட்டுள்ள குடும்பங்கள்.
IV. தொழிலின் நிமிர்த்தம் வெளிநாடு சென்று 06 மாதங்கள் தாண்டியுள்ளவர்களையுடைய குடும்பங்கள்.
V. கிராமியக் குழுவினால் இனங்காணப்படும் போற்றக்கூடிய நாளாந்த வருமானத்தினைப் பெறும் பயிற்றப்பட்ட தொழிலாளர்களையுடைய குடும்பங்கள்

**உதாரணம்:-**
- ❖ தச்சுத் தொழிலாளர்கள்.
- ❖ மேசன்மார்
- ❖ மின்சார தொழில்நுட்பவியலாளர்கள்.
- ❖ நீர்குழாய் பொருத்துனர்கள்.
- ❖ மோட்டார் வாகன தொழில்நுட்பம் போன்ற விசேட பயிற்சியுள்ள தொழிலாளர்களையுடைய குடும்பங்கள்.

**04. சமுர்த்தி நிவாரணம் பெறுவோரை தெரிவு செய்யும் போது கவனத்திற்கு கொள்ளப்படுகின்ற முக்கிய எடுகோள்கள்.**

I. கல்வி.
II. சுகாதாரம்.
III. குடும்பத்தின் வருமான நிலை.
IV. சொத்துக்கள்.
V. வீட்டின் நிலை.
VI. கவனத்திற்கொள்ள வேண்டிய பிற விடயங்கள்.

சமுர்த்தி நிவாரணம் பெறுவோரை தெரிவு செய்யும் போது அந்த விண்ணப்பதாரிக்குறியதாக கிராமியக் குழு அங்கத்தவர்கள் அல்லது தெரிவு செய்யும் குழுவின் மூலம் இணைப்பு இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பயனாளிகளை இனம்காணும் ''விண்ணப்பப்படிவத்தினை'' பயன்படுத்துதல் வேண்டும்.

**05. சமுர்த்தி நிவாரணத்தினை வழங்கும் போது கவனத்திற் கொள்ளப்படும் பிற விசேட விடயங்களும் காரணிகளும்.**

I. ஒரு வீட்டிற்கு இரண்டு நிவாரணப் படிவங்கள் கிடைத்தலாகாது. (இருப்பினும் ஒரு வீட்டில் வசித்து வந்தாலும் நிரந்தரமாக தனித்தனியாக உணவு தயாரித்து வாழும் திருமணமான குடும்பங்கள் இரண்டாயின் அக்குடும்பங்கள் அவ்வாறு சொல்லப்பட்ட வீட்டில் வசித்தாலும் தனித்தனியான இரு குடும்பங்கள் எனக்கருதுதல் வேண்டும்.)
II. ஒரே வீட்டிலுள்ள வயதான பெற்றோரை தனிமைப்படுத்தி நிவாரணத்தினை வழங்கலாது.
III. சமுர்த்தி நிவாரணத்தின் பொருட்டான உரித்துக்கள் கிடைப்பனவானது உரித்துப் படிவத்தின் மூலம் மாத்திரம் வழங்கப்படல் வேண்டும். (இணைப்பு இலக்கம் -02)
IV. சமுர்த்தி பயனாளி உரித்துப்படிவமானது நீண்ட நாட்களுக்கு பிற நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டான உரித்தொன்றாக இருத்தலாகாது.
V. நிவாரணம் பெறும் குடும்பம் ஒன்றின் அங்கத்தவர் ஒருவர் தொழிலில் ஈடுபடுதல்/ வெளிநாடு செல்லல்/ தொழில் ஒன்றினை மேற்கொள்கின்றமை போன்ற விடயங்களில் ஆறுமாத (06) சலுகைக்காலம் ஒன்றின் பின்னர் மாத்திரம் நிவாரணத்தினை அகற்றுவது தொடர்பில் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.
VI. நிவாரணம் பொறுவோரை பொருளாதார ரீதியாக வலுவூட்டும் பொருட்டு சகல உத்தியோகத்தர்களும் சமுதாய அடிப்படை அமைப்புக்களும் இலக்குகளுடன் செயற்படுவது எதிர்பார்க்கப்படுகின்றது.

## 06. சமுரத்தி நிவாரணத்தினைக் கோருதல், விண்ணப்பப்படிவங்களை பொறுப்பேற்றல் மற்றும் மேன்முறையீடுகளை கவனத்திற்கொள்ளல்.

- **விண்ணப்பப்படிவங்களைக் கோருதல்.**
  விண்ணப்பதாரியின் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், குடும்ப அங்கத்தவர்களின் பெயர்கள், வயது, குடும்பத்தின் வருமான வழிகள் போன்ற விபரங்கள் உள்ளடங்கிய விண்ணப்பப்படிவத்தை குறித்த பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு, சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி வலய அலுவலகம், அல்லது பிரதேச செயலகத்தில் ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்யாது வாய்மொழி மூல கோரிக்கை ஒன்றின் பொருட்டு உரிய விண்ணப்பப்படிவத்தினை தயாரிப்பது சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மேலும் ஏலவே பல்வேறு முறையீடுகள் மற்றும் பிற கோரிக்கை என்ற வகையில் முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் தொடர்பிலும், கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

- **விண்ணப்பப்படிவங்களை பொறுப்பேற்றல்**
  சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரால் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பில் பதிவேடு ஒன்றினை பராமரித்துக்கொள்ள வேண்டியதுடன் அதில் கிடைக்கப்பெற்ற திகதி, விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடிப்படையான அட்டை இலக்கம் மற்றும் கையடக்கத் தொலைபேசி இலக்கம் உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.

## 07. பயனாளிகளை தெரிவு செய்தல்.

பயனாளிகளை தெரிவு செய்யும் பொருட்டு கிராமிய குழுவொன்று நியமிக்கப்படும். அக்குழுவானது ''சமுர்த்தி நிவாரணத்தின் பொருட்டு தகுதியுடையவர்களை தெரிவு செய்யும் குழு'' என அழைக்கப்படுவதுடன் அது கீழுள்ள அங்கத்தவர்களிலிருந்து ஆகக்குறைந்தது ஐந்து அங்கத்தவர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். இக்குழுவினை நியமிக்கும் அதிகாரம் குறித்த பிரதேச செயலாளருக்கு வழங்கப்படுவதுடன் குழுவின் அழைப்பாளராக (ஏற்பாட்டாளராக) உரிய பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், அல்லது திணைக்களத்தின் பிறிதொரு உத்தியோகத்தர் செயற்படுதல் வேண்டும். இக்குழு நியமிக்கப்படாத சந்தர்ப்பங்களில் பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரால் கிராமியக் குழுவின் மேலும் 04 அங்கத்தவர்களை பங்கேற்கச் செய்து கொண்டு பொருத்தமான பயனாளிகளை தெரிவு செய்து கொள்ளல் வேண்டும். தற்போது சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இல்லாத பிரிவுகள் இருப்பின் இப்பணியின் பொருட்டு பிரதேச செயலகங்களின் சமுர்த்திப்பிரிவின் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்கள் அல்லது சமுதாய அடிப்படை வங்கிகளில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவரை அதன் நிமித்தம் தற்காழிகமாக ஈடுபடுத்திக் கொள்ளக்கூடிய அதிகாரம் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்படுகின்றது.

- **கிராமியக் குழுவின் அமைப்பு**
  I. பிரதேச விகாரைகளின் விகாராதிபதிகள், பிற சமயத் தலைவர்கள்.
  II. உள்ளூராட்சிமன்ற மக்கள் பிரதிநிதிகள்.
  III. பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர். (குழுவின் ஏற்பாட்டாளர்)
  IV. கிராம உத்தியோகத்தர்.
  V. பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்.
  VI. விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள்.
  VII. குடும்ப சுகாதார சேவைகள் உத்தியோகத்தர்கள்.
  VIII. சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர்கள்.

## 08. பயனாளிகள் பட்டியலை தயாரித்தல்.

- கிராமியக் குழுவினால் தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு குடும்பத்தின் பொருட்டும் இந்த **"பயனாளிகளை தெரிவு செய்யும் விண்ணப்பத்தினை"** (இணைப்பு 01) பூர்த்தி செய்தல் வேண்டும்.
- இந்த விண்ணப்பத்தில் உள்ளக்கப்பட்டுள்ள விடயங்களை விண்ணப்பதாரிக்கு/ பிரதான குடியிருப்பாளருக்கு விளக்கப்படுத்தி அவர்களின் கையொப்பத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். குறித்த விடயங்கள் பொய்யானது என வெளிக்கொணரப்பட்டால் பயனாளிகள் பட்டியலில் மாற்றங்கள் ஏற்படலாம் என்பதனை விளக்குதல் வேண்டும்.

- இந்த விண்ணப்பப்படிவத்தின் குறிப்பிடப்பட்ட எடுகோள்களின் (அடையாளப் படுத்தி) புள்ளிகளின் அளவுகள் விண்ணப்பதாரிக்கு உரியதாயின் வழங்குதல் வேண்டும்.
- அந்த விடயங்கள் உரித்துடையதல்லாவிடின் "O" பெறுமதியினை இடல் வேண்டும்.
- பிரிவின் பயனாளிப்பட்டியலை தயாரித்ததன் பின்னர் கிராமியக் குழுவின் அல்லது தெரிவுக் குழுவின் அங்கீகாரத்தினை அதன் பொருட்டு பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
- பின்னர் கீழுள்ள அட்டவணையின் பிரகாரம் பயனாளிகள் பட்டியலைத் தயாரித்தல் வேண்டும்.

**09. வங்கி வலய மட்டத்தில் சமுர்த்தி பயனாளிகள் பட்டியலை தயாரித்தல்.**

சமுர்த்தி வங்கி வலயம் ...............................................

| தொ.இல | கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும் | விண்ணப்பதாரியின் முழுப் பெயர் | முகவரி | தேசிய அடையாள அட்டை இலக்கம் | தொலைபேசி இலக்கம் | வழங்கிய புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |

**10. நிவாரணத்தினை அங்கீகரித்தல்.**

பிரிவு மட்டத்தில் பெற்றுக்கொள்ளப்படும் பட்டியலை கவனத்திற்கொண்டதன் பின்னர் கிராமியக் குழுவின் அல்லது தெரிவுக் குழுவின் சிபாரிசுகளைப் பெற்று வங்கி வலய முகாமையாளர்களால் உரிய பிரதேச செயலாளருக்கு சமர்ப்பிக்கின்ற பயனாளிகள் பட்டியலை கவனத்திற் கொண்டு விண்ணப்பதாரிக்கு சமுர்த்தி நிவாரண உரித்தினை வழங்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு வழங்கப்படுகின்றது. இணைப்பு இலக்கம் 02இன் கீழ் சமுர்த்தி கொடுப்பனவு வழங்கும் படிவம் வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

**11. பிரதேச செயலகப் பிரிவுமட்டத்தில் சமுர்த்தி பயனாளி பட்டியலைத் தயாரித்தல்.**

பிரதேச செயலகப் பிரிவு ................................................

| தொ.இல | வங்கி வலயம் | கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும் | விண்ணப்பதாரியின் முழுப் பெயர் | முகவரி | தேசிய அடையாள அட்டை இலக்கம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |

**12. மேன்முறையீடுகளை கவனத்திற்கொள்ளல்.**

எவரேனும் பயனாளியொருவர் சமுர்த்தி நிவாரணம் கிடைக்காமை காரணமாக அது தொடர்பில் திருப்திப்படாவிடின் உரிய மாவட்டத்தின் சமுர்த்திப் பணிப்பாளர் அல்லது மாவட்ட செயலாளர்/ சமுர்த்தி மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு தனது மேன்முறையீட்டினை எழுத்து மூலம் சமர்ப்பிக்க முடியும். அங்கு வழங்கப்படும் தீர்வு தொடர்பில் திருப்திப்படாவிடின் தலைமைக் காரியாலயத்தின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு மேன்முறையீடுகளை மேற்கொள்ள முடியும்.

**13. புதிய நிவாரணத்தினை வழங்குதல்.**

பிரிவு மட்டத்தில் இவ்வாறு புதிதாக சமுர்த்தி நிவாரணத்தினை வழங்கும் வேலைத்திட்டமானது 2021 பெப்ரவரி மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்படல் வேண்டும். பின்னர் 2021 மார்ச் மாதத்திலிருந்து அவ்வாறு தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு புதிய சமுர்த்தி நிவாரணக்கொடுப்பனவு வழங்கும் படிவம் வழங்கப்பட்டதன் பின்னர் அக்குடும்பங்களின் தகவல்களை முகாமைத்துவ மொடியூலில் (CRM) உட்படுத்தப்படல் வேண்டும். 2021 மார்ச் மாத்த்திலிருந்து ஒவ்வொரு மாதத்தின் இறுதித் திகதியில் பயனாளிகள் முகாமைத்துவ மொடியூலின் தரவுகளை கவனத்திற்கொண்டு உச்சபட்ச நிவாரண அறிக்கை தயாரிக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு பிரிவுகளிலும் ஏலவே வலுவூட்டப்பட்ட தொகுதியினருக்குறிய ரூபா 420/= நிவாரணம் மற்றும் ஏனைய நிவாரணங்களின் பெறுமதிகளை மீளத்திருத்தஞ் செய்ய வேண்டிய குடும்பங்கள் இருப்பின், இந்த நிவாரணம் பெறுவோரை தெரிவு செய்யும் முறையையே பயன்படுத்தி அவ்வாறு மேற்கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. 2019ம் ஆண்டின் ஜுலை மாதத்திலிருந்து மேலதிகமான குடும்பங்களின் எண்ணிக்கையொன்று புதிதாக சமுர்த்தி நிவாரண வேலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதனால் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் அந்த மாதத்திற்குள் இருந்த உச்சபட்ச குடும்பங்களின் எண்ணிக்கையினை கவனத்திற்கொண்டு இந்த வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் குடும்பங்களின் பொருட்டு புதிதாக நிவாரணங்களை வழங்கக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதுடன் 2019ம் ஆண்டின் ஜுலை மாதத்திற்குறிய உச்சபட்ச குடும்பங்களின் எண்ணிக்கைகளை தாண்டுகின்ற பிரகாரம் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் புதிதாக நிவாரணங்கள் வழங்கப்படலாகாது. ஏதேனும் பிரிவு ஒன்றிலிருந்து விலகிச்செல்லும் சமுர்த்தி நிவாரணக் குடும்பங்களின் எண்ணிக்கையே புதிதாக சமுர்த்தி நிவாரணத்தினை வழங்கும் போது அப்பிரிவிற்கோ அத்தியவசியமானதல்ல என்பதுடன் அப்பிரதேச செயலக அதிகார பிரதேசத்திற்கு வேறு ஒரு பிரிவு ஒன்றில் தகுதியான பயனாளிக்குடும்பத்திற்கு அந்த நிவாரணத்தினை வழங்கக்கூடிய வாப்புக்ககள் உள்ளதுடன் அவ்வாறால்லாத சந்தர்ப்பங்களில் அந்த மாவட்டத்தின் பிறிதொரு பிரதேச செயலகப் பிரிவு ஒன்றுக்கு அந்த வசதிகளை வழங்கக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

**14. CRM மொடியூல் பாவனையூடாக மாதாந்த நிவாரணம் சமுர்த்தி வங்கிக்கு நேரடியாக அனுப்புதல்.**

இந்த மொடியூல் நாளாந்தம் இற்றைப்படுத்துவதனால் மாதத்திற் குறியதாக நடைபெறுகின்ற புதிய சேர்க்கைகள், விலகல்கள், வசிப்பிடத்தில் மாற்றங்கள், மற்றும் பெயர் அல்லது பெறுமதியை திருத்தல்களை மாதத்தின் இறுதித்தினம் வரை மேற்கொள்ளப்படல் வேண்டும். மாதத்திற்குறிய சகல இற்றைப்படுத்தல்களையும் மேற்கொண்டதன் பின்னர் நீக்கங்கள் மற்றும் திருத்தங்கள் தொடர்பில் பிரிவு மட்டத்தில் மேற்கொண்ட கோரிக்கைகள் (Request) எதுவும் இருத்தலாகாகது. ஒவ்வொரு மாதத்தினதும் ஆரம்ப தினத்தில் அந்த மாதத்திற்குறிய நிவாரணத்தின் பொருட்டு பணத்தினை வழங்கும் அறிக்கையினை (Beneficiary Count Report - Zone wise) CRM மொடியூல் ஊடாக சமூக பாதுகாப்பு மற்றும் நலன்புரி பிரிவின் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. ஒவ்வொரு மாவட்ட அலுவலகமும் தனது பிரதேச செயலகங்களின் சமுர்த்திப் பிரிவுப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் இந்த மொடியூலை இற்றைப்படுத்தியதாக பராமரித்துச் செல்வதும் கண்காணிப்புச் செய்யவும் வேண்டும். ஒவ்வொரு தலைமையக செயலத்திலும் (Head Quarter Office) மாதத்தின் முதலாம் திகதியில் (வார இறுதி நாள் ஒன்றாயின் அடுத்தவரும் திங்கற் கிழமையில்) CRM மொடியூலிருந்து (Beneficiary Count Report - Zone Wise) பெற்றுக் கொண்டு Excel கோவை ஒன்றாக பதிவிறக்கம் செய்து களஞ்சியப்படுத்திக் கொள்ளல் வேண்டும். மேலும் கோவையிள் பெயருக்கு ஆண்டு மற்றும் மாதம் என்பனவற்றினைக் குறிப்பிட்டு Save செய்து வைத்துக் கொள்ளுமாறும் வினயமுடன் அறியத் தருகின்றேன்.

**15. சமுர்த்தி "பொன் அட்டைக்குறிவயர்" (Gold Card) குழுவினை இனங்காணுதல்.**

பொருளாதார ரீதியில் வலுவூட்டப்பட்டு தற்போது மாதாந்தம் சமுர்த்தி நிவாரணத்திட்டதிலிருந்து தன்னார்வத்துடன் விலகியுள்ள மற்றும் உத்தேச வலுவூட்டல் செயற்பாடுகளினூடாக அவ்வாறு மாதாந்த சமுர்த்தி நிவாரணத்திட்டத்திலிருந்து சுய விருப்பத்துடன் விலகிச்செல்லும் குடும்பங்கள் சமுர்த்தி வேலைத்திட்டத்திற்கு பலமொன்றினை வழங்கி நீண்ட காலமாக எம்மோடு இணைந்திருந்த குழவினராகும். ஆகையினால் அவர்களை சமுர்த்தி வேலைத்திட்டதிற்குள் வைத்துக்கொண்டு மேலும் இணைந்து செயற்படுவது மிகப் பொருத்தமானதாகும். அதன் பிரகாரம் வலுவூட்டப்படும் குழுவினர் உள்ளாகியுள்ள மாதாந்தம் ரூபா 420/=இற்கான நிதிப்பங்களிப்பு ஒன்றினை அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு முன்னரைப்போன்றே சமூக பாதுகாப்பு நன்மைகள், வீடமைப்பு லொத்தர் நன்மைகள், மற்றும் சேமிப்பு நன்மைகளை அவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதற்கு மேலதிகமாக ஆரம்பத்தில் 5% போன்ற குறைந்த வட்டி வீதம் ஒன்றின் கீழ் அகக்கூடியது ரூபா 500000/= வரையிலான கடன் தொகையினை சமுர்த்தி வங்கி மூலம் வழங்குவதற்கு பொருத்தமானதாகும் என்பதுடன் அவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற வாழ்வாதாரக் கருத்திட்டங்கள் மற்றும் மீண்டும் அக்கடன் தொகையினை செலுத்துதல் உள்ள ஆற்றல்களை கவனத்தின் கொண்டு கடன் தொகையின் அளவினை தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும்.

மேலும் இக்குழுவினை பாராட்டுதலுக்குட்பத்தி சான்றிதழ் ஒன்றினை வழங்குவது உட்பட வங்கி மற்றும் பிற நிறவனங்களுடன் செயற்படும் போது அதற்கு பலத்தினை வழங்குமாறு ‘‘பொன் அட்டைக்குறியர்’’ (Gold Card) அடையாள அட்டை ஒன்றினை வழங்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது. இதற்குறிய வழிகாட்டல்கள் மற்றும் உரிய பிற ஆலோசனைகள் எதிர்காலத்தில் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**16.** அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களால் வறுமையினை ஒழிக்கப்படும் நிமிர்த்தம் கஷ்டப் பிரதேச கிராமங்கள் மற்றும் குறைந்த வருமானம் பொறுவோரை இலக்காகக் கொண்டு பல வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படும் இந்த சந்தர்ப்பத்தில் அந்த வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக்கிக் கொள்ளும் பொருட்டு உங்கள் அனைவரினதும் பணிகளை இதன் பொருட்டு எதிர்பார்க்கின்றேன்.

ஆர்.பீ.பி.திலக்கசிரி
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்:-

1. செயலாளர்- நிதி அமைச்சு - த.கூ.க.பொருட்டு
2. செயலாளர்- பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமையினை ஒழிக்கும் பொருட்டான ஜனாதிபதி செயலணி - த.கூ.க.பொருட்டு
3. செயலாளர்- சமுர்த்தி, மனைப் பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில், தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு - த.கூ.க.பொருட்டு
4. கணக்காய்வாளர் தலைமையதிபதி, கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம் - த.கூ.க.பொருட்டு
5. பிரதம கணக்காளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந. பொருட்டு
6. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்- சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க.பொருட்டு
7. சகல பிரிவுத்தலைவர்கள், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந. பொருட்டு

Translated By: M.M.M. Jawhar (Translator)

**இணைப்பு இலக்கம் - 01**

**சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பம் ஒன்றினை தெரிவு செய்யும் எடுகோள்களும் விசாரணை அறிக்கையும்.**
**(சமுர்த்தி பயனாளிகளை தெரிவு செய்யும் விண்ணப்பம்)**

மாவட்டம் ……………………………… பிரதேச செயலகப் பிரிவு ………………………

சமுர்த்தி வங்கி வலயம் ………………….. கிராம உத்தியோகத்தர் பிரிவு …………………

விண்ணப்பதாரியின் பெயர் ………………………………………………………………

அடையாள அட்டை இலக்கம் ………………… தொலைபேசி இலக்கம் ……………..…………

முகவரி ………………………………………………………………………………

| குடும்ப உத்தியோகத்தர்களின் பெயர்கள் (முதலெழுத்துடன்) | வயது | தொழில் / பணி | வருமானம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

| தொடர் இலக்கம் | எடுகோள் | எடுகோள்களின் பொருட்டு வழங்கும் (கொடுத்த) புள்ளிகள் | விண்ணப்பதாரிக்கு வழங்கப்படும் புள்ளிகள் (உரித்துடையதாகா விடத்து 0ஐ இடவும்) |
|---|---|---|---|
| | **01 கல்வி** | | |
| 1.1 | குடும்பத்தில் எந்தவொரு அங்கத்தவரும் 8ம் தரத்தினை தேராமையுள்ளமை | 4 | |
| 1.2 | பொருளாதார கஷ்டம் காரணமாக பாடசாலை செல்லும் வயதினையுடைய இருப்பினும் பாடசாலை செல்லாத சிறுவர்கள் உள்ளமை | 4 | |
| | **02 சுகாதாரம்** | | |
| 2.1 | குடும்ப அங்கத்தவர் ஒருவர் நீண்ட காலமாக நோயால் அவதிப்படல் | 5 | |
| 2.2 | குடும்ப அங்கத்தவர் ஒருவர் மாற்றுத்திறனாளி நிலையில் இருத்தல் | 5 | |
| | **03 பொருளாதார நிலை** | | |
| 3.1 | தனிநபர் வருமானமானது ரூபா 6000/= த்திலும் குறைவு | 4 | |
| 3.2 | தனிநபர் வருமானமானது ரூபா 5500/= இலும் குறைவு | 4 | |
| 3.3 | மின்சாரம்/ நீர் / தொலைபேசிக் கட்டணங்களின் மாதாந்த பெறுமதியானது ரூபா 2000/= த்திலும் குறைவு | 4 | |

| | | | |
|---|---|---|---|
| | **04. சொத்துக்கள்** | | |
| 4.1 | தனக்குச் சொந்தமான 0.5 ஏக்கரிலும் குறைந்த காணி இருத்தல், காணி விசாலமானதாக இருந்தாலும் இயற்கை அனர்த்தத்தின் காரணமாக வெற்றிகரமாக விவசாயம் செய்ய முடியாதுள்ளமை | 5 | |
| 4.2 | பிற சொத்துக்களின் கீழ், சைக்கிள், மோட்டார்சைக்கிள், (125cc வலுவிலும் குறைந்த) ஸ்கூட்டர் தவிர்ந்த பிற அசையும் சொத்துக்கள் இல்லாமை | 5 | |
| 4.3 | வீட்டு உபகரணங்களின் கீழ், வானொலி, தொலைக்காட்சி, மின்விசிறி, சாதாரணமான கையடக்க தொலைபேசி, தவிர்ந்த பிற உபகரணங்கள் இல்லாமை | 5 | |
| 4.4 | இயந்திர மீன்பிடிப் படகுகள் மற்றும் இயந்திர மயமான விவசாய உபகரணங்கள் இல்லாமை | 5 | |
| | **05. வீடு** | | |
| 5.1 | விண்ணப்பதாரிக் குடும்பத்திற்கு வசிப்பதற்கு குடும்பத்திற்குச் சொந்தமான வீடு இல்லாமை மற்றும் கீழுள்ள எடுகோள் வசதிகள் இல்லாமை | 10 | |
| 5.1.1 | நுகர்வுக்காக சுத்தமான நீரைப் பெற்றுக் கொள்ள முடியாமை. | 2 | |
| 5.1.2 | முறையான கழிப்பறை வசதிகள் இல்லாமை | 4 | |
| 5.1.3 | வெளிச்சத்தினைப் பெற்றுக்கொள்ள மண்ணென்னெய் போன்ற முறைகளை பயன்படுத்துதல். | 4 | |
| 5.2 | விண்ணப்பதாரிக் குடும்பத்திற்கு வசிப்பதற்கு அவர்களுக்கு சொந்தமான வீடு ஒன்று இருப்பின் கீழுள்ள எடுகோள்களுக்கமைய புள்ளிகள் கிடைக்கப்பெறும் | | |
| 5.2.1 | விண்ணப்பதாரி குடிசை /வரிசை /சேரி /லயன் குடியிருப்புக்களில் வசித்தல். | 2 | |
| 5.2.2 | வதியும் வீட்டின் சுவரானது கழிமண்ணினாலான கல், கழி மண், பலகை, தகடு, தென்னன் கிடுகு, பனை ஓலை போன்றவற்றினைக் கொண்டிருத்தல். | 2 | |
| 5.2.3 | கூரை – தகடு, தென்னங்கிடுகு, வைக்கோல் போன்றவற்றினைக் கொண்டிருத்தல் | 2 | |
| 5.2.4 | சகல நடவடிக்கைகள் மற்றும் உறங்குவதற்கு தனியான ஒரு அறை மாத்திரம் உள்ளமை | 2 | |
| 5.2.5 | வீட்டின் நிலப்பரப்பானது 650 சதுர அடியிலும் குறைவாக இருத்தல் | 2 | |
| 5.2.6 | நுகர்வுக்கு சுத்தமான நீரை பெற்றுக் கொள்ள முடியாமை | 2 | |
| 5.2.7 | முறையான கழிப்பறை வசதிகள் இல்லாமை | 4 | |
| 5.2.8 | வெளிச்சத்தினைப் பெற்றுக்கொள்ள மண்ணென்னெய் போன்ற முறைகளை பயன்படுத்துதல் | 4 | |

| | | | |
|---|---|---|---|
| | **06. கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்** | | |
| 6.1 | குடும்பத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை. (1-2 புள்ளிகள் 05, 3 - 4 புள்ளிகள் 07, 05 மற்றும் அதிலும் கூடியவர்கள் புள்ளிகள் 10) | 10 | |
| 6.2 | குழு இனங்கண்ட விசேட எடுகோள் – 01 | 4 | |
| 6.3 | குழு இனங்கண்ட விசேட எடுகோள் - 02 | 4 | |
| 6.4 | குழு இனங்கண்ட விசேட எடுகோள் - 03 | 4 | |
| 6.5 | குழு இனங்கண்ட விசேட எடுகோள் - 04 | 4 | |
| 6.6 | குழு இனங்கண்ட விசேட எடுகோள் - 05 | 4 | |
| | விண்ணப்பதாரி / குடும்பத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளிகள் | 100 | |

மேலே குறிப்பிட்ட தகவல்னை நான் தெளிவாக விளங்கிக் கொண்டதன் பின்னர் இந்த விசாரணைக்காக வந்த உத்தியோகத்தர்கள் மற்றும் குழு அங்கத்தவர்களுடன் இணைந்து பூர்த்தி செய்யப்பட்டதனை உறுதிப்படுத்துகின்றேன்.

…………………………………..……….

**விண்ணப்பதாரியின் கையொப்பம்**

நாம் தனிப்பட்ட ரீதியாக விண்ணப்பதாரி வசிக்கும் வளவுச் சூழலை பரீட்சித்துப் பார்த்து தகவல்களை உறுதிப்படுத்துகின்றோம்.

**குழுவின் சிபாரிசு:- சிபாரிசு செய்யப்படுகின்றது / சிபாரிசு செய்யப்படவில்லை.**

குழு அங்கத்தவர்களின் பெயரும் கையொப்பமும்

01. 02.

03. 04.

05.

**இணைப்பு இலக்கம் 02**

.................................. பிரதேச செயலகம்

திகதி :- ..............................................

திரு/திருமதி/செல்வி ...................................................

....................................................

(நிவாரணம் கிடைக்க வேண்டிய தகுதியினையுடையவரின் பெயரும் முகவரியும்)

கிராம உத்தியோகத்தர் பிரிவு ............................................................

## <u>வலுவூட்டச் செய்யும் பொருட்டு சமுர்த்தி கொடுப்பனவினை வழங்குதல்</u>

தங்களால் ........................ம் திகதி சமர்ப்பித்த சமுர்த்தி நிவாரண விண்ணப்பப்படிவம் தெரிவுக் குழு மூலமாக தெரிவு செய்யப்பட்டுள்ளதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

02. அதன் பிரகாரம் ரூபா .............................. பெறுமதியான நிவாரணக் கொடுப்பனவு ஒன்று ..............ம் திகதி முதல் மீண்டும் அறிவிக்கப்படும் வரை தங்களது குடும்பத்திற்கு வழங்கப்படும்.

03. அந்த நிவாரணப்பெறுமதியிலிருந்து சமூக பாதுகாப்பு நிதியத்தின் பொருட்டு ரூபா ..........................வும், வீடமைப்பு லொத்தர் நிதியத்திற்கு ரூபா .................................. தொகை மற்றும் பணமாக ரூபா........................... தங்களது சமுர்த்தி வங்கியின் அங்கத்துவ கணக்கில் வரவு வைக்கப்படுகின்றது.

04. இந்த நிவாரணத்தினை பயனாகப்பெறும் போது தங்களுக்கு கீழ் குறிப்பிடப்படும் மேலதிக நன்மைகளும் கிடைக்கப்பெறும்.

அதற்காக தங்களால் சமூக பாதுகாப்பு உரித்து விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து தங்களுக்கு சொந்தமான பிரிவின் சமுர்த்தி உத்தியோதகத்தர் ஊடாக சமுர்த்தி வலய அலுவலகங்கள் ஊடாக பிரதேச செயலகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

I. பிள்ளைப்பேரு ஒன்றின் பொது ரூபா 10,000/=ற்கான கொடுப்பனவு ஒன்று கிடைக்கப்பெறும். (ஆகக்கூடியது 03 சந்தர்ப்பங்களுக்கு) இதற்கு மேலதிகமாக இட்டைக் குழந்தைப் பேற்றின் போது இரண்டு பிள்ளைகளுக்கு மாதம் ஒன்றிற்கு ரூபா 5000/= வீதமும் மூன்று குழந்தைப்பேறு மற்றும் அதிலும் கூடிய பிள்ளைப்பேற்றின் போது மாதம் ஒன்றிற்கு ரூபா 10,000/= ஒரு வருடக்காலத்திற்கு மேலதிக நிதி நிவாரணம் கிடைக்கப்பெறும்.

II. குடும்ப அங்கத்தவர் ஒருவரின் திருமணத்தின் போது ரூபா 10,000/=திற்கான கொடுப்பனவு ஒன்று கிடைக்கப்பெறும். (ஆகக்கூடியது இரண்டு சந்தர்ப்பத்திற்கு)

III. குடும்ப அங்கத்தவர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அக்குடும்பத்திற்கு வருடம் ஒன்றிற்கு உட்சபச்சம் 30 நாட்களுக்கு உட்பட்டதாக ஆகக் குறைந்தது 5 நாட்களின் பொருட்டு நாள் ஒன்றிற்கு ரூபா 350/= வீதம் ஆகக் கூடியது ரூபா 10,500/= கொடுப்பனவு ஒன்று கிடைக்கப்பெறும்.

IV. குடும்ப அங்கத்தவர் ஒருவரின் இறப்பின் பொருட்டு ரூபா 20,000/=ற்கான கொடுப்பனவு ஒன்று கிடைக்கப்பெறும்.

V. தங்களது குடும்பத்தின் பிள்ளையொருவர் க.பொ.த (ச/தர) தேரி, க.பொ.த (உ/தர) கற்கும் போது மாதம் ஒன்றிற்கு ரூபா 1500/= வீதம் இரண்டு வருடங்களுக்கு சிப்தொர புலமை பரிசில் நன்மைகள் கிடைக்கப்பெறும்.
(மேலுள்ள I,II,III,VI,Vக்குறியதான விடயங்கள் சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் திருத்தங்களுக்குள்ளாகலாம்.)

VI. தங்கள் வீடமைப்பு லொத்தரில் வெற்றியாளர் ஒருவரானால் தங்களுக்கு ரூபா 200,000/=ற்கான பணப்பரிசு ஒன்று வீட்டினை அமைத்துக்கொள்ளவோ புதிப்பித்துக் கொள்ளவோ முடியும்.

05. நிவாரணத்தைப் பெறும் திகதியிலிருந்து பலம் வாய்ந்த பொருளாதார அடித்தளம் ஒன்றினை தங்களது குடும்பத்தில் கட்டியெழுப்பிக் கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

06. தங்களது குடும்ப அலகில் உள்ள சகல அங்கத்தவர்களும் போதைப் பொருள் பாவனையிலிருந்து விலகியிருத்தல் வேண்டும்.

07. தாங்கள் சமுர்த்தி வேலைத்திட்டத்தில் செயற்பாடுள்ள அங்கத்தவர் ஒருவராக இருத்தல் வேண்டும். (இதன் பிரகாரம் குழுக்கூட்டங்கள், மாதாந்த சமுதாய அடிப்படைக் கூட்டங்கள், சேமிப்புச் செயற்பாடுகளுக்கு செயற்பாட்டு ரீதியான பங்களிப்பினை வழங்குதல் வேண்டும்.

08. தங்களது குடும்பத்தின் பொருளாதாரத்தினை பலப்படுத்திக் கொள்ளும் பொருட்டு தங்களிடம் தெளிவான குடும்ப அபிவிருத்தித் திட்டமிடல் ஒன்று இருத்தல் வேண்டும்.

09. தாங்கள் இந்த நிவாரணம் வழங்குவதனை பெற்றுக் கொள்ளும் முகமாக தங்களது நிரந்தர முகவரிக்குச் சொந்தமான சமுர்த்தி வங்கியில் அங்கத்தவர் சேமிப்பு கணக்கு ஒன்றினை ஆரம்பித்து வங்கி நடவடிக்கைகளுடன் தொடர்புபடல் வேண்டும்.

10. தங்களது குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கையில் திருத்தங்கள் ஏற்பட்டால் நிவாரணப் பெறுமதியும் திருத்தப்படும்.

11. தங்களது வதிவிடத்தில் மாற்றங்கள் ஏற்பட்டல் அதுபற்றி எனக்கு அறிவித்தல் வேண்டும்.

12. தங்களால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தெரிவு எடுகோள்களுக்கு முரணாகவோ அல்லது பொய்யானது என வெளிக்கொணரப்பட்டால் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இந்த நிவாரணம் வழங்குவதனை இடைநிறுத்த முடியும் என்பதனை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

…………………………..  ……………………………
திகதி  பிரதேச செயலாளர்

மேலுள்ள விடயங்கள் தொடர்பில் விளக்கத்தினைக் கொண்டுள்ளதாகவும், இந்த ஆலோசனைகளுக்கமைய செயற்படுவதாகவும் இணங்குகின்றேன்.

…………………………….  …………………………….
திகதி  பயனாளியின் கையொப்பம்
பயனாளிகளின் பெயர்:-